**தமன பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும், விரிவான முகாமைத்துவ அறிக்கையும் 2020 மே 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குச் சொந்தமான 43 கடைகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2019 ஆம் ஆண்டில் பிரதேச சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,106,913 செலவினம் செய்து நிர்மாணிக்கப்பட்ட வாராந்த சந்தையின் புதிய 02 கடைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணங்களில் பூர்த்தி வேலைப் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். புதிய கட்டிடத்தை எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செலுத்தவேண்டிய கணக்குகள் | | |
| 2017 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து செலவின கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 363,850 தொகையை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கொள்வனவுகள் தொடர்பான ஏனைய தகவல்கள் அல்லது அவை சபைக்கு கிடைத்தமைக்கான தகவல்கள் எதனையும் கண்டறிய முடியாதிருந்தது. |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,515,138 தொகையான 05 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 3,170,546 தொகையான 05 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய கணக்கு விடயங்கள் தொடர்பான தகவல்களை கண்டறிய முடியாதுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம்.<br>------------<br>(i) 139(1) ஆம் பிரிவு | - | ஆதன வரி விதிப்பதன் கீழ் ஆதனமொன்றின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தவணை அறிக்கை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது வருமான பரிசோதகரை ஈடுபடுத்தி இந்த அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 159 ஆம் பிரிவு | 618,873 | 2010 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட 35 கடைகளில் இருந்து நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடை வாடகை தொடர்பாக வாடகையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | பிரதேச சபைகள் விதி (நிதி மற்றும் நிர்வாகம்)<br>-------------- | | | | |
| | விதி 217 | - | பிரதேச சபைக்கு சொந்தமான மற்றும் பிரதேச சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற காணிகளை கையேற்று மதிப்பீட்டு பெறுமதி நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை | பிரதேச சபை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கையளிப்பதில் உள்ள தாமதத்தின் காரணமாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>----------------- | | | | |
| | நிதிப் பிரமாணம் 571 | 963,694 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய 35 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | - | 03 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | தினமும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சில வாகனங்கள் பழுது பார்ப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,769,889 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,338,954 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 970,907 | 420,906 | 255,620 | 1,713,056 | 420,907 | 659,877 | 583,052 | 1,547,770 |
| (ii) | வாடகை | 4,172,626 | 2,910,849 | 2,817,875 | 618,873 | 3,144,754 | 3,916,818 | 2,939,581 | 525,899 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,450,000 | 2,217,792 | 2,217,792 | 83,750 | 900,000 | 1,200,230 | 1,114,780 | 83,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,486,100 | 3,983,345 | 3,796,304 | 1,145,448 | 3,843,500 | 3,650,672 | 5,868,388 | 958,407 |
| | | 11,079,633 | 9,532,892 | 9,087,591 | 3,561,127 | 8,309,161 | 9,427,597 | 10,505,801 | 3,115,826 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதன வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் ஆதன வரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிலுவை வருமான பதிவேட்டின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி ரூபா 1,482,206 ஆக இருந்த போதிலும் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆதன வரி மதிப்பீடு மேற்கொள்வதுடன் நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டு முதல் ஆதன வரிப் பதிவேடு Excel Sheet இல் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அதில் காணப்படுகின்ற மீதியை அறவிடுவதற்காக பிடியாணை விநியோகிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ஏக்கர் வரி ரூபா 230,850 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டும். | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 (3) ஆம் பிரிவின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நிலைமையை தயாரித்துக் கொண்டதன் பின்னர் இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான 30 பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 இம் திகதி வரையில் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினம் ரூபா 5,604,055 ஆக இருந்ததுடன் கழிவுப் பொருள் வரி விதித்து அந்த செலவினங்களை தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினங்கள் கழிவுப் பொருள் வரியை விதித்து அறவிடப்பட வேண்டும். | கழிவுப் பொருள் வரி விதிப்பதற்காக 2020.02.18 ஆம் திகதி சபைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030 தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் மற்றும் நோக்கங்களை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்குச் சொந்தமான நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட 35 கடைகளில் இருந்து 2010 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 558,039 மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய 10 சதவீத தாமதக் கட்டணம் ரூபா 60,834 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை மற்றும் தாமதக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | உரிய பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமையினால் பணம் அறவிடலில் வசதியீனம் ஏற்பட்ட போதும் மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன், பணம் செலுத்துகின்ற சந்தர்ப்பத்தின் போது தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை** | | |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 08 பதவிகளுக்காக 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்கள் நிரப்பப்பட செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்ற 02 வாகனங்கள் நீண்ட காலமாக பழுதுபார்க்கப்படாமல் கட்டிட சூழலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத்தீர்த்தல் தொடர்பாகவோ சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | வாகனங்களின் பழுதுபார்த்தல் சரியான பிரகாரம் மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | EP JZ-4488 மற்றும் EP RA-2004 போன்ற இரண்டு டெக்டர்களும் எதிர்காலத்தில் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சபையின் வருமான நிலைமையின் பிரகாரம் இந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமையினால் தாமதம் ஏற்பட்டிருந்தது. |